## வினா எண் : 41- 44
## துணைப்பாடக் கட்டுரைகள்



### 1. ஒருநாள் கழிந்தது

- புதுமைப் பித்தன்

**ஆசிரியர் குறிப்பு:**

புதுமைப்பித்தன் கடலூர் மாவட்டத்தில் உள்ள திருப்பாதிரிப்புலியூரில் பிறந்தார். புதுமைப்பித்தனின் இயற்பெயர் சொ. விருத்தாச்சலம் என்பதாகும். இவர் 'சிறுகதை இலக்கிய உலகின் மன்னன்' எனவும் 'தமிழ்நாட்டின் மாப்பசான்' என்றும் சிறப்பிக்கப்படுகிறார். மானிட இனத்தின் மெல்லிய உணர்வுகளை இவரது கதை படம்பிடித்து காட்டுகிறது. அவர் கடுமையான காசநோய்க்கு ஆளாகி மே 5, 1948-ல் காலமானார்.

**முதன்மை கதைமாந்தர்கள்**

1. முருகதாசர்
2. கமலம் (மனைவி)
3. அலமு (மகள்)

**துணைக் கதைமாந்தர்கள்**

1. சுப்பிரமணியம்
2. கடைக்காரன்
3. ரிக்ஷாக்காரன்
4. பங்கஜம்
5. சுந்தரம்

**கதைக்கரு : புலமையும் வறுமையும் இணைந்தே வாழும்**

**1. ஒருநாள் கழிந்தது என்னும் கதையைக் கருப்பொருளும் சுவையும் சிதையாமல் சுருக்கி எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. முருகதாசரின் குடும்பம்
3. மனைவியின் வேண்டுகோள்
4. சுப்பிரமணியத்தின் வருகை
5. அலமுவின் அலம்பல்
6. கடன்கேட்டல்
7. நாளை கதையை நாளைப் பார்ப்போம்
8. முடிவுரை

**2. ஒருநாள் கழிந்தது என்னும் கதையில் வரும் முருகதாசரைப் பற்றி விரிவாய் எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. முருகதாசரின் குடும்பம்
3. முருகதாசரின் பணி
4. முருகதாசரின் பொருளாதாரம்
5. முருகதாசரின் நண்பர்கள்
6. முருகதாசர் குழந்தை மேல் கொண்ட அன்பு
7. முருகதாசர் கடன் கேட்கும் விதம்
8. முடிவுரை

**3. முருகதாசர் சுப்பிரமணியத்திடம் உதவிபெற்ற பிறகு வாழ்வில் உயர்ந்ததாய் உம் கற்பனைத்திறத்தை இணைத்து ஒரு கதை எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. சிறுகதைக்கான திட்டம்
3. சிறுகதையும் முதல் பரிசும்
4. கனவு நிறைவேறியது
5. பரிசும் பாராட்டும்
6. முடிவுரை

## 2. தேங்காய்த் துண்டுகள்

- மு. வரதராசனார்



**ஆசிரியர் குறிப்பு:**

மு. வரதராசனார் வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் முனுசாமி-அம்மாக்கண்ணு தம்பதியர்க்கு மகனாய் பிறந்தார். திருவேங்கடம் என்று பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டாலும் தாத்தாவின் பெயரான வரதராசன் என்ற பெயரே அவருக்கு நிலைத்துவிட்டது. மு. வரதராசனார் 90 நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார். இவரது தமிழ் இலக்கிய வரலாறு சாகித்திய அகாதெமி பரிசு பெற்றது.

**முதன்மை கதைமாந்தர்கள்**

1. கதைத் தலைவன்
2. ஆசிரியர்

**துணைக் கதைமாந்தர்கள்**

1. வேலன்
2. முனிசாமி
3. கல்லூரி மாணவர்கள்
4. சிறுவர்கள்
5. கூட்டத்தில் நின்றவர்கள்

**கதைக்கரு : என்றும் ஆபத்து பிக்பாக்கெட்**

**1. தேங்காய்த் துண்டுகள் என்னும் கதையைக் கருப்பொருளும் சுவையும் சிதையாமல் சுருக்கி எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. ஊராரின் உதவி
3. பசி தீர்ந்தது
4. ஆசிரியர் செய்த உதவி
5. வேலனைத் தேடி வந்தான்
6. ஆசிரியர் அறிந்து கொள்ள நினைத்த கதை
7. முனுசாமியின் கதை
8. வேலனின் மறைவு
9. முடிவுரை

**2. "என்றைக்கும் ஆபத்து பிக்பாக்கெட்" என்று கண்ணீர் விட்டுக் கெஞ்சியவன் மனந்திருந்தி உயர்ந்ததாக உம் கற்பனைத் திறத்தினால் ஒரு கதை எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. திருடனாய் இருக்கலாம் என்ற சந்தேகம்
3. போலீஸ் துரத்தியது
4. திருடனுடன் சந்திப்பு
5. மன்னிப்பும் தண்டனையும்
6. திருந்திய வாழ்வு
7. முடிவுரை

## 3. மறுமணம்

- விந்தன்



**ஆசிரியர் குறிப்பு:**

விந்தனின் இயற்பெயர் கோவிந்தன். இவர் காஞ்சிபுரம் மாவட்டம் நாவலூரில் வேதாசலம், ஜானகி தம்பதியர்க்கு மகனாக பிறந்தார். ஏழைகள் படும்பாட்டை இவரது பாடல்கள் பிரதிபலிக்கும். "கண் திறக்குமா?" என்ற கதையை 1947-ல் நக்கீரன் என்ற புனைப்பெயரில் எழுதினார். மக்கள் எழுத்தாளர் விந்தன் 1975ஆம்ஆண்டு ஜீன் 30ஆம் நாள் காலமானார்.

**முதன்மை கதைமாந்தர்கள்**
1. கதாநாயகன்
2. சீதா

**துணைக் கதைமாந்தர்கள்**
1. கதாநாயகனின் அம்மா
2. சீதாவின் அம்மா
3. ரகு
4. ராதை
5. சங்கரன்

**கதைக்கரு : இருமனம் அல்ல திருமணம். ஒரு மனமே திருமணம்**

**1. மறுமணம் என்னும் கதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**
1. முன்னுரை
2. திருமண பந்தம்
3. பிரிவின் ஏக்கம்
4. குடும்பத்தில் வெறுப்பு
5. சீதாவின் நல்ல உள்ளம்
6. அம்மாவின் அவசியம்
7. மறுமண எண்ணம்
8. சீதாவின் முடிவு
9. முடிவுரை

**2. மறுமணம் என்னும் கதையில் சீதா என்னுத் பாத்திரத்தை ஆய்க.**

**குறிப்புச்சட்டகம்**
1. முன்னுரை
2. சீதாவின் வாழ்க்கை
3. சீதா குழந்தைகளிடம் கொண்ட அன்பு
4. சீதா தன் தோழியின் குழந்தைக்கு தாயானாள்
5. சீதா கதைத்தலைவனை மறுமணத்திற்கு வற்புறுத்தல்
6. சீதா கதைத் தலைவனின் ஆசையை நிராகரித்தல்
7. சீதாவின் உறுதித் தன்மை
8. முடிவுரை

**3. மறுமணம் கதையின் நாயகன் விதவையைக் கல்யாணம் செய்துகொண்டு வாழ்வில் உயர்ந்ததாக கற்பனைத்திறத்தால் கதை எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**
1. முன்னுரை
2. மனமுடைந்த கதைத் தலைவன்
3. சீதா பார்த்த பெண்
4. சங்கரியைப் பார்க்கச் சென்ற கதைத்தலைவன்
5. திருமணம் நடைபெறல்
6. கதைத்தலைவனின் நிம்மதி
7. முடிவுரை

## 4. செங்கமலமும் ஒரு சோப்பும்



- சுந்தர ராமசாமி

**ஆசிரியர் குறிப்பு:**

சுந்தர ராமசாமி நாகர்கோவில் அருகே உள்ள தழுவிய மகாதேவர் கோவில் என்ற கிராமத்தில் பிறந்தார். பசுவய்யா என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதியவர். நவீன தமிழ் இலக்கியத்தில் தமிழ்மொழியினை பல்வேறு தளங்களுக்கு கொண்டு சென்றவர். "சில நேரங்களில் சில மனிதர்கள்" நாவலுக்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.

**முதன்மை கதைமாந்தர்கள்**
1. செங்கமலம்
2. கௌரிக்குட்டி

**துணைக்கதைமாந்தர்கள்**
1. கிருமிகள்
2. சோப்பு

**கதைக்கரு : மற்றவர் குற்றம் பார்க்கின் தன் குற்றம் மறந்தே போகும்**

**1. "செங்கமலமும் ஒரு சோப்பும்" என்னும் கதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. செங்கமலத்தின் வேலை
3. கௌரிக்குட்டியின் மாற்றம்
4. செங்கமலம் கௌரிக்குட்டி நட்பு
5. கௌரிக்குட்டிக்கு பரிசோதனை
6. சோதனையில் குழப்பம்
7. குழப்பம் தீர்ந்தது
8. செங்கமலத்தின் குற்ற உணர்ச்சி
9. முடிவுரை

**2. "கௌரிக்குட்டி" என்னுத் பாத்திரத்தை ஆய்க.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. செங்கமலத்தின் வேலை
3. செங்கமலம் கௌரிக்குட்டி நட்பு
4. கௌரிக்குட்டிக்கு பரிசோதனை
5. கௌரி குட்டியின் புத்தி கூர்மை
6. கௌரிக்குட்டி செங்கமலத்திடம் வினவியது
7. முடிவுரை

## 5. ஒரு பிரமுகர்



- ஜெயகாந்தன்

**ஆசிரியர் குறிப்பு:**

ஜெயகாந்தன் கடலூர் மாவட்டம் மஞ்சக்குப்பம் என்ற ஊரில் பிறந்தார். வாழ்வின் மேன்மை, அவலம் அனைத்தையும் தன் கதைகளின் பேசும் பொருளாக்கியவர். தமிழ் சிறுகதை வரலாற்றில் தனக்கென்று தனி அடையாளத்தை உருவாக்கியவர். ஆரம்ப காலத்தில் சிறுபத்திரிக்கைகளில் கதைகள் எழுதி வந்தவர்.

**முதன்மை கதைமாந்தர்**
1. கட்டெறும்பு

**துணைக் கதைமாந்தர்கள்**
1. சிற்றெறும்பு
2. மனிதர்கள்

**கதைக்கரு : சிறிய புத்தி உள்ளவனுக்கு உலகம் தனக்குத் துன்பம் தரும்போது பெரியதாகவும், இன்பம் நேரும்போது சிறியதாகவும் தோன்றும்.**

**1. ஒரு பிரமுகர் என்னும் கதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. எறும்பின் அறிமுகம்
3. நலிந்தவனிடம் பலத்தை காட்டுதல்
4. எறும்பின் தலைக்கனம்
5. பிறர் துன்பம் உணராமை
6. எறும்பு உணர்ந்த பிரளயம்
7. மனிதர்களுக்கு அறிவுரை
8. தன் பார்வையில் தவறான கணிப்பு
9. முடிவுரை

**2. ஒரு பிரமுகர் கதைப்பகுதியை நாடக வடிவில் எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**

**காட்சி-1**
இடம் : கிராமத்தின் சாலையில் உள்ள வேலமரத்தடி
காலம் : மாலை
பங்குபெறுவோர் : கட்டெறும்பு, சிற்றெறும்பு, மனிதர்கள்

**காட்சி-2**
இடம் : வேலமரத்தடி
காலம் : அந்திசாயும் நேரம்
பங்குபெறுவோர் : கட்டெறும்பு, மக்கள் கூட்டம்

**காட்சி-3**
இடம் : வேலமரத்தடி
காலம் : அந்தி மாலை
பங்குபெறுவோர் : கட்டெறும்பு, சாலையைக்கடந்து செல்லும் மக்கள்
**முதன்மை கதாப்பாத்திரங்கள்:** கட்டெறும்பு, சிற்றெறும்பு, மனிதர்கள்

**ஒரு பிரமுகர் கதைப்பகுதி உணர்த்தும் செய்தி:**

"கிணற்று தவளைகளுக்கு கிணறு தான் உலகம்" என்பது போல மக்கள் சிலர் தாங்கள் வாழும் இடத்தையும் தன் குணத்தையும் ஒரு போதும் மாற்றிக்கொள்வதில்லை. கட்டெறும்பு போன்ற மனப்பான்மை கொண்ட மனிதர்கள் தங்கள் குணத்தை மாற்றிக்கொள்ள வேண்டும் என இந்த கதை வழியாக ஜெயக்காந்தன் விளக்குகிறார்.

## 6. மண்ணின் மகன்

**- நீல. பத்மநாபன்**



**ஆசிரியர் குறிப்பு:**

நீல. பத்மநாபன் கன்னியாக்குமரி மாவட்டம் இரணியலில் பிறந்தார். "இலையுதிர்காலம்" என்ற புதினத்துக்காக சாகித்திய அகாதெமி விருதுபெற்றவர். சிறுகதை, புதினம், இதழ் என் பல்வேறு துறைகளில் முத்திரைப் பதித்தவர்.

**முதன்மை கதைமாந்தர்கள்**
1. அந்தோணி
2. மணல்

**துணைக் கதைமாந்தர்கள்**
1. சாமுவேல்
2. அற்புதராஜ்
3. சயின்டிபிக் ஆபீசர்

**கதைக்கரு : நம் தாய்க்கு கொடுக்கும் அதே சிறப்பை நம் தாய்மண்ணுக்கும் கொடுப்போம்**

**1. ''மண்ணின் மகன்'' தலைப்பில் உள்ள கருத்தை எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. சயின்டிபிக் ஆபிசர்
3. முகம் தெரியா உருவம்
4. மண்ணின் வளம்
5. சண்டையும் சமாதானமும்
6. நாட்டு நலன்
7. சாமுவேல் வருகை
8. மண்ணின் மகன் அந்தோணி
9. முடிவுரை

**2. ''அற்புதராஜ் பாத்திரப் படைப்பினை விளக்குக.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. மண்வளம்
3. ஊர் மக்களுக்கு ஊறு
4. சண்டையும் சமாதானமும்
5. சயின்டிபிக் ஆபிசர் அற்புதராஜ்
6. மண்ணின் மகன் அந்தோணியின் மரணம்
7. முடிவுரை

**3. சயின்டிபிக் ஆபிசர் மண்ணின் மகன் கதையைக் கூறுவதுபோல எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. சயின்டிபிக் ஆபிசர்
3. மண்வளம்
4. மறியலும் மனமாற்றமும்
5. அந்தோணியின் ஆவேசம்
6. மணலில் கதிரியக்கம்
7. அந்தோணி மறைதல்
8. அந்தோணி யார்?
9. முடிவுரை

## 7. அனுமதி



**- சுஜாதா**

**ஆசிரியர் குறிப்பு:**

சுஜாதா தமிழகத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் ஒருவர். இவர் இயற்பெயர் இரங்கராஜன். இவர் தனது மனைவி பெயரான சுஜாதா என்ற பெயரில் கதை எழுதியவர். தன் தனிப்பட்ட கற்பனை நடையால் வாசகர்களை ஈர்த்தவர். ஆனந்த விகடனில் இவர் எழுதிய "கற்றதும் பெற்றதும்" தொடர் மிகப் பிரபலமானது.

**முதன்மை கதைமாந்தர்கள்**

1. இராமதுரை
2. மகாலெட்சுமி
3. பாலாஜி

**துணைக் கதைமாந்தர்கள்**

1. ரமேஷ்
2. விஷ்ணுமூர்த்தி

**கதைக்கரு : நேர்மையே உயரிய கொள்கை. முயன்று உழைத்துப் பெறும் பதவியே உயர்ந்த பதவி**

**1. அனுமதி என்னும் கதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. ஆசிரியர் குறிப்பு
3. கதைமாந்தர்கள்
4. இராமதுரையின் குடும்பம்
5. தந்தையின் ஆலோசனை
6. மகனும் தந்தையும்
7. உதவி செய்தல்
8. ஆலோசனை கூறுதல்
9. இராமதுரையின் வீட்டிற்கு விஷ்ணுமூர்த்தி செல்லுதல்
10. பாலாஜியின் சந்தோஷம்
11. இராமதுரையின் சிந்தனை
12. முடிவுரை

**2. பாலாஜி பாத்திரத்தை ஆய்க.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. ஆசிரியர்குறிப்பு
3. கதைமாந்தர்கள்
4. பாலாஜி
5. தந்தையின் எண்ணம்
6. தேர்வைப் பற்றி பாலாஜியின் சிந்தனை
7. அன்னை மகாலெட்சுமி
8. தந்தையின் முறையீடு
9. இராமதுரையின் கோபம்
10. அனுமதித் தேர்வு வினாத்தாள்
11. பாலாஜியின் உயர்ந்த பண்பு
12. முடிவுரை

**3. பாலாஜி உண்மையாக உழைத்து உயர்ந்ததாக ஒரு கதை எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. பாலாஜி தேர்வு எழுதாமல் வீடு திரும்புதல்
3. தந்தையின் கேள்வியும் பாலாஜியின் பதிலும்
4. பாலாஜியின் சபதம்
5. படிப்பில் மட்டுமே கவனம்
6. மகாலெட்சுமியின் மனவருத்தம்
7. தந்தையின் மகிழ்ச்சி
8. தேர்வில் வெற்றி பெற்றான் பாலாஜி
9. பெற்றோர் மகிழ்ந்தனர்
10. பதவி உயர்வு
11. முடிவுரை

## 8. விழிப்பு

- சிவசங்கரி



**ஆசிரியர் குறிப்பு:**

சிவசங்கரி தனிமனித மேம்பாட்டுக்கு பயன்படும் அக்னி அமைப்பினை ஏற்படுத்தியுள்ளார். இவர் 1993-லிருந்து "இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு" என்ற செயற்திட்டத்தை முன்னெடுத்து வருகிறார். நெஞ்சில் நிற்பவை என்ற சிறுகதை தொகுப்பை சிவசங்கரி தொகுத்து வானதி பதிப்பகம் வெளியிட்டது.

**முதன்மை கதைமாந்தர்கள்**

1. கைலாசம்
2. அத்தை

**துணைக் கதைமாந்தர்கள்**

1. சுரேஷ்
2. நாணா
3. பாபு
4. அம்மா, அப்பா

**கதைக்கரு : கிடைப்பதில் திருப்தி அடையாமல் கிடைக்காததை எண்ணி ஏங்கக்கூடாது.**

**1. விழிப்பு என்னும் கதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. ஆசிரியர்குறிப்பு
3. கைலாசம் தெருவில் கண்ட காட்சி
4. நாய்கள்
5. அலுமினிய வியாபாரி
6. குப்பை பொறுக்கும் பெண்
7. நண்பன் நாணாவின் அத்தை
8. சமூக சேவகி அத்தையின் அறிவுரைகள்
9. கைலாசத்தின் நினைவுகள்
10. கறுப்புபிள்ளையார் எறும்புகள்
11. கைலாசத்தின் நண்பன் பாபு
12. அத்தை தொடுத்த வினாக்கள்
13. கைலாசத்தின் தாய் வருந்துதல்
14. முடிவுரை

**2. கைலாசத்தின் பாத்திரத்தை ஆராய்க.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. ஆசிரியர்குறிப்பு
3. கைலாசம் தெருவில் கண்ட காட்சி
4. நாய்கள்
5. அலுமினிய வியாபாரி
6. குப்பை பொறுக்கும் பெண்
8. சமூக சேவகி அத்தையின் அறிவுரை
9. கைலாசத்தின் நினைவு
10. கைலாசத்தின் தந்தைக்கு ஏற்பட்ட கோபம்
11. கைலாசத்தின் நண்பன்
12. சுரேஷுக்கு வேலை கிடைத்ததற்கு விருந்து
12. அத்தை தொடுத்த வினாக்கள்
13. எறும்புகள் ஊர்வலம் தொடங்கின!
14. அத்தையின் அறிவுரை
15. துன்பத்தில் இன்பம் காணல்
16. சேர்ந்து சாப்பிடலாம் வாங்க அம்மா!
13. கைலாசத்தின் இயல்புகள்
14. முடிவுரை

**3. கைலாசம் தொண்டு செய்து உயர்ந்ததாய் நும் கற்பனை கலந்து ஒரு கதை எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. உழைப்பே உயர்வு
3. தூய்மை
4. கைலாசத்தை பார்த்து கேலியும் கிண்டலும்
5. கைலாசத்தின் தொண்டினை உணர்ந்த இளைஞர்கள்
6. கைலாசத்தின் உதவியும் தூய்மையும்
7. தூய்மையின் உண்மையை உயர்தல்
8. முடிவுரை



## 9. அனந்த சயனம் காலணி

**- தோப்பில் முகம்மது மீரான்**

**ஆசிரியர் குறிப்பு:**

தோப்பில் முகம்மது மீரான் தமிழ் இஸ்லாமிய படைப்பாளிகளுள் முக்கியமானவர். இவர் கன்னியாக்குமரி மாவட்டம் தேங்காய் பட்டினம் என்னும் ஊரில் பிறந்தவர். தற்போது திருநெல்வேலியில் வசிக்கும் தோப்பில் போர்த்துகீசியரின் படையெடுப்பை பின்னணியாகக் கொண்ட நாவலை எழுதி வருகிறார்.

**முதன்மை கதைமாந்தர்கள்**

1. ஆசிரியர் மீரான்
2. ஆசிரியரின் மகன்

**துணைக் கதைமாந்தர்கள்**

1. பேராசிரியர் சீனிவாசன்
2. டீக்கடைக்காரர்
3. கிழவர்

**கதைக்கரு: நகரத்தில் உள்ள நண்பர் வீடாயினும் உறவினர் வீடாயினும் உரிய விலாசத்தை எடுத்துச்செல்ல வேண்டும்.**

**1. அனந்த சயனம் காலணி என்னும் கதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. ஆசிரியர்குறிப்பு
3. ஆசிரியரின் மகன் குடும்பம்
4. பேராசிரியர் சீனிவாசனைத் தேடி ஆசிரியர்……
5. முகவரி எழுதிய துண்டுச்சீட்டை வீட்டிலேயே மறந்து விடல்
6. ஆசிரியரின் மனக்கவலை
7. அனந்த சயனம் காலணி
8. டீக்கடைக்காரர்
9. ஏ தெருவும் பி தெருவும்
10. கூந்தல் கண்ணில் பட்டது
11. ஹீரொஹோண்டா தம்பதிகள்
12. செவ்வாழைத்தாருடன் கிழவர்
13. ஆசிரியர் வீடு திரும்புதல்
14. முடிவுரை

**2. புரொபசர் சீனிவாசனின் வீட்டைக் கண்டுபிடிக்க ஆசிரியர் பட்ட துயரங்களை எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. ஆசிரியர்குறிப்பு
3. மகன்
4. அனந்த சயனம் காலணிக்குள் செல்லுதல்
5. பேராசிரியர் வீட்டைத் தேடி அலைதல்
6. ஆசிரியரின் கவலை
7. அனந்த சயனம் காலணி
8. டீக்கடைக்காரர்
9. ஏ, பி தெருக்களில் ஆசிரியர்
10. ஹீரொஹோண்டா தம்பதிகள்
11. ஆங்கில நாளிதழ் படிக்கும் ஒருவர்
12. எஸ். கே. சங்கர் ஐ.ஏ.எஸ் (ஓய்வு)
13. கிழவரின் சந்திப்பு
14. முடிவுரை

**3. பேராசிரியர் சீனிவாசன் அவர்களுடைய முகவரியைக் கண்டுபிடித்து அவருடன் அளவளாவியதாக ஒரு கட்டுரை வரைக.**

**குறிப்புச்சட்டகம்**

1. அனந்த சயனம் காலணியில் ஆசிரியர் மீரான்
2. கடந்தகால நிகழ்ச்சிகளை நினைவு கூறுதல்
3. கடிதம் எழுதியிருக்க கூடாதா?
4. பொறுங்கள் பார்க்கலாம்
5. பேராசிரியரின் மனைவி கூற்று
6. நம்பிக்கையுடன் நாடி வந்த நண்பர்
7. இடம் காலியாக வாய்ப்பு வரும்
8. தொலைபேசி மணி ஒலித்தது
9. டெல்லியில் வேலை
10. உங்கள் நம்பிக்கை வீணாகவில்லை
11. உங்கள் மகனுக்கு சீட் உறுதி



## 10. கரையும் உருவங்கள்

- வண்ணநிலவன்

**ஆசிரியர் குறிப்பு:**

வண்ணநிலவனின் இயற்பெயர் உ. இராமச்சந்திரன். வண்ணநிலவன் சிறுகதைகள் தொகுப்பை நற்றிணை பதிப்பகம் வெளியிட்டுள்ளது. கடல்புரத்தில், கம்பா நதி, ரெயினீஷ் ஐயர் தெரு ஆகிய புகழ்பெற்ற நாவல்களை எழுதியவர்.

**முதன்மை கதைமாந்தர்கள்**

1. சங்கரன்
2. சங்கரனின் அக்கா

**துணைக் கதைமாந்தர்கள்**

1. சங்கரனின் தம்பி
2. சங்கரனின் அப்பா
3. சங்கரனின் நண்பன்
4. ஆறுமுகம்-சங்கரனின் மாமா

**கதைக்கரு : வேலை இல்லாத இளைஞனின் மனநிலை, தன் உழைப்பில் உண்ணும் சிறந்த எண்ணம்**

**1. ‘‘கரையும் உருவங்கள்’’ என்னும் கதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுக.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. கதைமாந்தர்
3. சங்கரின் மனநிலை
4. அப்பாவின் ஆதங்கமும், அக்காவின் அன்பும்
5. படிப்புமில்லை வேலையுமில்லை!
6. கரையும் உருவங்கள்
7. முடிவுரை

**2. சங்கரன் பாத்திரத்தை ஆய்க.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. ஆசிரியர் குறிப்பு
3. சங்கரன்
4. இரவில் வீடு திரும்புதல்
5. செருப்பு அறுந்தது
6. வீட்டை அடைதல்
7. உணவு சாப்பிட மறுத்தல்
8. ஊஞ்சல் நினைவு
9. வேலைக்கு அலைதல்
10. அக்காவின் அறிவுரை
11. கரையும் உருவங்கள்
12. முடிவுரை

**3. “கரையும் உருவங்கள்” என்னும் கதையின் ஆசிரியர், படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவரின் மனநிலையைப் படம்பிடித்து காட்டியுள்ள பாங்கினை விளக்குக.**

**குறிப்புச்சட்டகம்**

1. முன்னுரை
2. சங்கரன்
3. இசையை ரசிக்க முடியாத நிலை
4. செருப்பு அறுந்தது
5. வீட்டினுள் நுழைய கூச்சம்
6. உண்ண மறுத்தல்
7. அக்காவின் அறிவுரை
8. வேலை தேடுதல்
9. ரோசக்கார சங்கரன்
7. முடிவுரை

தயாரிப்பு
திரு. த. செல்வேந்திரன் முதுகலை பட்டதாரி ஆசிரியர்அரசு மேல்நிலைப்பள்ளி, மூவானூர், திருச்சி

தயாரிப்பில் உதவி
திருமதி. நா. தேவிகா சுரேஷ் MA., B.Ed., P.G.D.C.A.,
வெற்றிக்கு வழி ஆசிரியர் குழு

# 45. பாடலுக்கான ஆசிரியர் குறிப்பு, திரண்ட கருத்து, மையக்கருத்து எழுதுதல்

## எழுதும் முறை

**1. ஆசிரியர் குறிப்பு:**

கொடுக்கப்பட்டுள்ள கவிதையில் எந்த ஆசிரியரின் கவிதை கொடுக்கப்பட்டுள்ளது என முதலில் கவனிக்க வேண்டும். பெரும்பாலும் பாரதியார், பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், கவிமணி போன்றோரின் கவிதைகளே இடம் பெற்றிருக்கும். எனவே ஒவ்வொரு ஆசிரியரின் வாழ்க்கைக் குறிப்பை அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

**2. திரண்ட கருத்து:**

கொடுக்கப்பட்ட பாடலின் ஒவ்வொரு வரிக்கும் உள்ள பொருளைத் தனித்தனி வாக்கியங்களாக அமைத்து எழுத வேண்டும். எழுதிய வாக்கியங்களை ஒன்று, இரண்டு என பத்திகளில் எழுத வேண்டும். திரண்ட கருத்து பொதுவாக உரைநடையில் அமைந்திருத்தல் வேண்டும். கருத்தை எழுதத் தொடங்கும் முன், **“வாழைக்கு அழகு குருத்து! பாட்டுக்கு அழகு கருத்து!”** என்பது போன்ற முகவுரையை கொடுத்து எழுதுதல் நலம்.

**3. மையக்கருத்து:**

கொடுக்கப்பட்ட பாடல் எந்தக் கருத்தை மையமாக வைத்து பாடப்பட்டது எனக் கண்டறிந்து மையக் கருத்தைக் குறிப்பிட வேண்டும். கருத்தை எழுதத் தொடங்கும் முன், **“வட்டத்திற்கு புள்ளி மையம்! பாட்டிற்குக் கருத்து மையம்!”** என்பது போன்ற முகவுரையை கொடுத்து எழுதுதல் நலம்.

**பயிற்சி : 1**

தாயென அன்பு செய்து
தந்தைபோல் பரிந்து, சொந்த
சேயென அணைத்துப் பேசி
செவ்விய அறிவு கூறி

தூயநன் னடத்தை கற்கத்
துணையென நடந்து காட்டும்
ஆயநற் குணமுள் ளோனே
ஆசானென் றழைக்கத் தக்கோன்

**- நாமக்கல் கவிஞர்**

**ஆசிரியர் குறிப்பு:**

| | | |
|---|---|---|
| பெயர் | : | கவிஞர் வெ. இராமலிங்கனார் |
| ஊர் | : | நாமக்கல் மாவட்டம் மோகனூர் |
| பெற்றோர் | : | வெங்கட்ராமன் - அம்மணி அம்மாள் |
| பணி | : | தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞர், சட்ட மேலவை உறுப்பினர் |
| படைப்புகள் | : | அவனும் அவளும், மலைக்கள்ளன், சங்கொலி, என் கதை, கவிதாஞ்சலி |
| காலம் | : | 19-10-1888 – 24-08-1972 |
| சிறப்பு | : | தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர். இவருக்கு நடுவணரசு பத்மபூஷண் விருது வழங்கி சிறப்பித்தது. இவர் காந்தியக்கவிஞர் எனவும் வழங்கப்படுகிறார். |

**திரண்ட கருத்து:**

**வாழைக்கு அழகு குருத்து! பாட்டுக்கு அழகு கருத்து!!**

ஆசிரியர் தாயைபோல அன்பு காட்டுபவர். தந்தை போல் நம்மிடத் பாசமாக பேசி சிறந்த அறிவுரைகளை கூறுபவர். நல்ல பழக்கவழக்கங்களை கற்றுக்கொடுத்து தானும் அதுபோல் வாழ்ந்து காட்டுபவர். இவ்வாறு பல நல்ல குணமுள்ள ஆசிரியரே ஆசான் என்று அழைப்பதற்கு உரியவர் ஆவார்.

**மையக்கருத்து:**

**வட்டத்திற்கு புள்ளி மையம்! பாட்டிற்குக் கருத்து மையம்!!**

இக்கவிதையில் ஆசிரியரின் மேன்மை பற்றி கூறப்பட்டுள்ளது. உலகில் தாய், தந்தை, நண்பனாக இருந்து வழி நடத்துபவர் ஆசிரியர் ஒருவரே என்பது இப்பாடலின் மையக்கருத்து ஆகும்.

**பயிற்சி : 2**

செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே – எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே
காவிரி தென்பெண்ணை பாலாறு – தமிழ்க்
கண்டதோர் வையை பொருணை நதி – என
மேவிய யாறு பலவோடத் – திரு
மேனி செழித்த தமிழ்நாடு

– மகாகவி பாரதியார்

**ஆசிரியர் குறிப்பு:**

பிறப்பு : தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரம்
பெற்றோர் : சின்னச்சாமி இலக்குமி அம்மையார்
இயற்பெயர் : சுப்பிரமணியன்
பணி : மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியர்
படைப்புகள் : கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம்
சிறப்பு : இளமையிலேயே கவி பாடும் திறன் பெற்றிருந்தார்.
காலம் : 19-10-1888 – 24-08-1972

**திரண்ட கருத்து :**

**வாழைக்கு அழகு குருத்து! பாட்டுக்கு அழகு கருத்து!!**

இப்பாடலில் மகாகவி பாரதியார் தமிழ்நாட்டின் பெருமைகளைப் பறைசாற்றுகிறார். செந்தமிழ்நாடு என்ற சொல் தேன் உண்டதைப் போல் செவிகளுக்கு இன்பம் தருகின்றது. இது எங்கள் தந்தையர் நாடென்று பேசும்போது எங்கள் மூச்சினில் சக்தி பிறக்கிறது. காவிரி, தென்பெண்ணை, பாலாறு, தமிழ் வளர்த்த மதுரையில் பாயும் வைகை, பொதிகை மலையில் தோன்றும் தாமிரபரணி ஆகிய நதிகள் பாய்ந்து தமிழ்நாடு செழிக்கிறது என்று தமிழ்நாட்டின் பெருமைகளைக் கூறுகிறார் பாரதியார்.

**மையக்கருத்து:**

**வட்டத்திற்கு புள்ளி மையம்! பாட்டிற்குக் கருத்து மையம்!!**

இப்பாடலில் பாரதியார் தமிழ்நாட்டின் சிறப்புகளை பறைசாற்றுகிறார். மேலும் தமிழ்நாட்டின் செழிப்பையும் வனப்புகளையும் பற்றி புகழ்ந்து கூறுகிறார்.

**பயிற்சி : 3**

மனிதரெல்லாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகசா லைவேண்டும் நாட்டில் யாண்டும்.

- பாரதிதாசன்

**ஆசிரியர் குறிப்பு:**

பிறப்பு : புதுவை
பெற்றோர் : கனக சபை இலக்குமி அம்மையார்
இயற்பெயர் : கனக சுப்புரத்தினம்
சிறப்பு : பாரதியார் மீது கொண்ட அன்பால் தம் பெயரை பாரதிதாசன் என்று மாற்றிக்கொண்டார்.
படைப்புகள் : குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு, பிசிராந்தையார்
காலம் : 29-04-1891 – 21-04-1964

**திரண்ட கருத்து :**

**வாழைக்கு அழகு குருத்து! பாட்டுக்கு அழகு கருத்து!!**

இப்பாடல் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் புத்தகசாலை என்னும் கவிதையில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. நூல் நிலையங்களின் அவசியத்தை இப்பாடல் மூலம் வலியுறுத்துகிறார். மனிதர் எல்லாரும் அன்புவழியில் நடப்பதற்கும் வானைப்போல் விரிந்த சிந்தனைகள் உருவாவதற்கும் சுயநலம் என்னும் இருளைப் போக்குவதற்கும் மனிதர் அனைவரும் சமம் என மதித்து நடப்பதற்கும் தேவையான இனிமையான உயர்ந்த சிந்தனைகளெல்லாம் புலவர்கள் தரும் புத்தங்களில் உள்ளன. மக்கள் தூய்மையான புது வாழ்வு வாழ நாடு முழுவதும் நூல் நிலையங்கள் வேண்டும்.

**மையக்கருத்து :**

**வட்டத்திற்கு புள்ளி மையம்! பாட்டிற்குக் கருத்து மையம்!!**

மனித மனங்களைச் செதுக்கி வாழ்வாங்கு வாழவைப்பவை நூல்கள். மக்கள் தூய்மையான புதுவாழ்வு வாழ நாடு முழுவதும் நூல் நிலையங்கள் வேண்டும்.

**பயிற்சி : 4**

பாலைவனம் சோலைவன மாக வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்
சாலைகளில் பல தொழிலும் பெருக வேண்டும்
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்
சீலைஉடை கதருடையாய்த் திகழ வேண்டும்
தேசப்பக்தி செழித்தோங்கி வளர வேண்டும்
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்
வெற்றியின் மேல் வெற்றி உமக்கெய்த வேண்டும்

**- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

**ஆசிரியர் குறிப்பு:**

| | |
|---|---|
| பிறப்பு | : கன்னியாக்குமரி மாவட்டம் தேரூர் |
| பெற்றோர் | : சிவதாணுப்பிள்ளை – ஆதிலெட்சுமி |
| படைப்புகள் | : மலரும் மாலையும், ஆசிய ஜோதி, மருமக்கள் வழி மான்மியம், கவிமணியின் உரைமணிகள் |
| பணி | : திருவனந்தபுரம் அரசா் கலைக்கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியா் |
| சிறப்புப் பெயர் | : நாஞ்சில் நாட்டுக் கவிஞன் |
| காலம் | : 27-08-1876 – 26-09-1954 |

**திரண்ட கருத்து :**

**வாழைக்கு அழகு குருத்து! பாட்டுக்கு அழகு கருத்து!!**

இப்பாடலில் கவிமணி அவர்கள், நாட்டில் விவசாயம் பெருகி பாலைவனங்கள் சோலையாக மாற வேண்டும் எனவும் தொழிற்சாலைகளில் பல தொழிலும் பெருகிட வேண்டும் எனவும், தமிழ்மொழி ஆட்சிமொழியாக அதிகாரம் பெற வேண்டும் எனவும், அனைவரும் சுதேசி உடையான கதருடை உடுத்த வேண்டும் எனவும் அதன் மூலம் தேசபக்தி வளர வேண்டும் எனவும், வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும் எனவும் கூறுகிறார்.

**மையக்கருத்து:**

**வட்டத்திற்கு புள்ளி மையம்! பாட்டிற்குக் கருத்து மையம்!!**

மக்கள் வாழ்வில் முன்னேற்றமடைய வேண்டும் என்பதே இப்பாடலின் மையக்கருத்தாகும்.

**பயிற்சி : 5**

எந்தக் கடவுளை எவர் தொழுதாலும்
எத்தனை வேற்றுமை நமக்கிருந் தாலும்
இந்தியர்க் கெல்லாம் பொதுவாம் தெய்வம்
இந்தக் கொடியே இதிலென்ன ஐயம்
காற்றொடு பெருமழை கலந்தடித் தாலும்
கடுத்தவர் இருந்தெடில் படையெடுத்தாலும்
போற்றிஇக் கொடியை உயிரெனக் காப்போம்
பூதலம் வியந்திடும் புகழொடு பூப்போம்
ஏழையும் செல்வனும் எனதென தென்றே
எல்லொ ரும்தொழ நடுவினில் நின்றே
வாழிய வையகம் வாழ்ந்திட வேண்டி
வாழிய கொடியே வாழ்கபல் லாண்டு

- **நாமக்கல் கவிஞர்**

**ஆசிரியர் குறிப்பு:**

| | | |
|---|---|---|
| பெயர் | : | கவிஞர் வெ. இராமலிங்கனார் |
| ஊர் | : | நாமக்கல் மாவட்டம் மோகனூர் |
| பெற்றோர் | : | வெங்கட்ராமன் - அம்மணி அம்மாள் |
| பணி | : | தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞர், சட்ட மேலவை உறுப்பினர் |
| படைப்புகள் | : | அவனும் அவளும், மலைக்கள்ளன், சங்கொலி, என் கதை, கவிதாஞ்சலி |
| காலம் | : | 19-10-1888 – 24-08-1972 |
| சிறப்பு | : | தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்தவர். இவருக்கு நடுவணரசு பத்மபூஷண் விருது வழங்கி சிறப்பித்தது. இவர் காந்தியக்கவிஞர் எனவும் வழங்கப்படுகிறார். |

**திரண்ட கருத்து:**

**வாழைக்கு அழகு குருத்து! பாட்டுக்கு அழகு கருத்து!!**

நமக்குள் பல வேற்றுமைகள் இருந்தாலும் அனைவருக்கும் பொதுவான தெய்வமாக இருப்பது நம் தேசியக் கொடியே. காற்று, மழை போன்ற இயற்கை சீற்றங்களாலும், நம் பகைவர் நம்மீது படையெடுத்தாலும் நம் கொடியை நாம் உயிரெனக் காக்க வேண்டும். ஏழை, செல்வந்தர் என்ற பாரபட்சமின்றி அனைவரும் கொடியை போற்ற வேண்டும். இந்த உலகம் நன்றாக வாழ இக்கொடி பல ஆண்டு காலம் வாழ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்.

**மையக்கருத்து:**

**வட்டத்திற்கு புள்ளி மையம்! பாட்டிற்குக் கருத்து மையம்!!**

இந்தியாவில் மதங்கள் பல இருந்தாலும் தேசியக்கொடியே நம் தெய்வம். எந்நிலையிலும் நம் கொடியை உயிரென மதிக்க வேண்டும் என்பதே இதன் மையக்கருத்தாகும்.

**பயிற்சி : 6**

உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்
இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்
எங்கள் தமிழ் உயர்வென்று நாம்சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம் குறைகளைந்தோ மில்லை
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்.

- **பாவேந்தர் பாரதிதாசன்**

**ஆசிரியர் குறிப்பு:**

பிறப்பு : புதுவை
பெற்றோர் : கனக சபை - இலக்குமி அம்மையார்
இயற்பெயர் : கனக சுப்புரத்தினம்
பணி : தனது 16வது வயதில் புதுவை அரசினர் கலைக்கல்லூரியில் பேராசிரியர் பணி
படைப்புகள் : குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு, பிசிராந்தையார்
சிறப்பு : பாரதியார் மீது கொண்ட அன்பால் தம் பெயரை பாரதிதாசன் என்று மாற்றிக்கொண்டார்.
காலம் : 29-04-1891 – 21-04-1964

**திரண்ட கருத்து:**

**வாழைக்கு அழகு குருத்து! பாட்டுக்கு அழகு கருத்து!!**

இப்பாடல், பாவேந்தர் பாரதிதாசனின் 'தமிழ்வளர்ச்சி' என்னும் கவிதையில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்மொழியினை வளர்க்கும் முறையினை இப்பாடல் மூலம் வலியுறுத்துகிறார்.

பல்வேறு துறைகளுக்கும் தமிழ்மொழியில் நூல்களை உருவாக்க வேண்டும். அவை பிறர் உதவியின்றித் தாமே படித்து அறிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழ்நடையில் இருத்தல் வேண்டும். தமிழ் அறிவை மதங்களுக்குள்ளே அடக்காமை வேண்டும். ஊர்கள் தோறும் இலவச நூல் நிலையங்களை உருவாக்க வேண்டும். தமிழின் பழம்பெருமைகளைக் கூறிக்கொண்டே காலத்தைக் கழிக்காமல் குறைகளை நீக்கிப் புதுமைகளைப் படைக்க வேண்டும். இவ்வழிகளைப் பின்பற்றி உலகின் ஒளிமிக்க மொழியாகத் தமிழை வளர்க்கலாம்.

**மையக் கருத்து :**

**வட்டத்திற்கு புள்ளி மையம்! பாட்டிற்குக் கருத்து மையம்!!**

மனித மனங்களில் தமிழ்மொழியினைக் குறித்த புதுமைகளை ஏற்படுத்த ஊர்கள் தோறும் இலவசநூல் நிலையங்களை அமைக்க வேண்டும். மதங்களுக்குள்ளே தமிழை அடக்காமல் உலகின் ஒளிமிக்க மொழியாகத் தமிழை வளர்க்க வேண்டும்.

**பயிற்சி : 7**

கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப் போல
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப் பாம்பாய் எண்ணி யெண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்.

**- பாவேந்தர் பாரதிதாசன்**

**ஆசிரியர் குறிப்பு:**

பிறப்பு : புதுவை
பெற்றோர் : கனக சபை - இலக்குமி அம்மையார்
இயற்பெயர் : கனக சுப்புரத்தினம்
படைப்புகள் : குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு, பிசிராந்தையார்
சிறப்பு : பாரதியார் மீது கொண்ட அன்பால் தம் பெயரை பாரதிதாசன் என்று மாற்றிக்கொண்டார்.
காலம் : 29-04-1891 – 21-04-1964

**திரண்ட கருத்து :**

**வாழைக்கு அழகு குருத்து! பாட்டுக்கு அழகு கருத்து!!**

இப்பாடல் பாவேந்தர் பாரதிதாசனாரின் "அழகின் சிரிப்பு" என்னும் கவிதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதை ஆகும். இப்பாடல் பாவேந்தரின் கற்பனை நயத்திற்கு மிகச்சிறந்த சான்று ஆகும். விழுதினைப் பாம்பாக எண்ணி அச்சமுறும் குரங்கினையும் அதன் செயல்களையும் நகைச்சுவை உணர்வுடன் படம் பிடித்துக் காட்டுகிறார். ஆலவிழுதினைப் பாம்பென்று எண்ணி அச்சமுற்ற குரங்கு மேற்கிளையில் தாவிக்குதித்தது. அங்கேயும் விழுது தொங்க அதையும் பாம்பென்று எண்ணித் தாவுகிறது. இவ்வாறு கிளைகள் தோறும் தாவிக்குதித்து மரத்தின் உச்சிக்கே சென்று விட்டது. அச்சம் அகன்று நிம்மதியுடன் இருந்த குரங்கு மெல்ல திரும்பிப் பார்த்த போது தன்வாலினைப் பார்த்துவிட்டது. அதனையும் பாம்பென்று எண்ணிப் பயம் கொள்கிறது.

**மையக்கருத்து:**

**வட்டத்திற்கு புள்ளி மையம்! பாட்டிற்குக் கருத்து மையம்!!**

“அரண்டவன் கண்ணிற்கு இருண்டதெல்லாம் பேய்” என்னும் பழமொழியை நினைவு கொள்ளும் படியாக இப்பாடல் அமைந்துள்ளது.

## 45. பா நயம் பாராட்டுதல்

**இலக்கிய நயம் பாராட்டும்போது கவனிக்க வேண்டியவை:**

- வினாத்தாளில் கொடுக்கப்பட்ட பாடலை இரண்டு மூன்று முறை பொருள் விளங்கும் வரை படித்துப் பார்க்கவேண்டும்.
- கடினமான சொற்களை அடிக்கோடிட்டு கொள்ள வேண்டும்.
- சொல்லுக்குச் சொல் பொருள் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.
- முதலில் பாடலின் திரண்ட கருத்தை புரிந்து கொள்ள வேண்டும்.
- பாடல் எந்தச் சூழலில் பாடப்பட்டுள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும்.
- பிழையின்றி எழுத முயற்சி செய்ய வேண்டும்.
- புரியாத சொற்களைப் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது.
- நீண்ட வாக்கியங்களில் எழுதுவதை தவிர்க்கலாம்.

**தொடைநயம்:**

**தொடையற்ற பாட்டு, நடையற்றுப் போகும்!!**

என்பதற்கு இணங்க இப்பாடலில் எதுகை, மோனை, முரண், இயைபு போன்ற தொடைநயங்கள் சிறப்புற அமைந்துள்ளன.

**மோனை நயம் :**

**“பாட்டுக்கு வீணை**
**கவிதைக்கு மோனை”**

என்பதற்கு இணங்க இப்பாடலில் மோனை சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்** : முதலெழுத்து ஒன்றி வருவது மோனை.

**எடுத்துக்காட்டு** : **அ**ண்ணன் சுட்ட தோசை
**அ**ன்பு நிறைந்த தோசை

**எதுகை நயம் :**

**“இயற்கைக்கு அழகு பொய்கை**
**பாட்டிற்கு அழகு எதுகை”**

என்பதற்கு இணங்க இப்பாடலில் எதுகை சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்** : இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை எனப்படும்.

**எடுத்துக்காட்டு** : வீட்டில் பூனை வளர்க்க நினைத்தேன்
பாட்டில் அதனை வடித்து நின்றேன்

**இயைபு நயம்:**

**“இயைபற்ற பாட்டு**
**தொய்வுற்றுப் போகும்”**

என்பதற்கு இணங்க இப்பாடலில் எதுகை சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்** : இறுதி எழுத்து ஒன்றி வருவது இயைபு எனப்படும்.

**எடுத்துக்காட்டு** : பள்ளி முடிந்து சென்றோ**மே**
பார்த்து நாமும் நின்றோ**மே**

**முரண் நயம்:**

"படைக்கு அரண்
பாட்டிற்கு முரண்"

என்பதற்கு இணங்க இப்பாடலில் முரண் தொடை சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்** : ஒரு பாடலில் எதிர்ச்சொற்கள் அமைந்திருப்பின் அதனை முரண்தொடை என்பர்.

**எடுத்துக்காட்டு** : நல்ல x கெட்ட

**சந்த நயம்:**

"சந்தம் பாட்டிற்குச் சொந்தம்"

என்பதற்கு இணங்க இப்பாடலில் சந்தம் சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்** : சந்தம் என்பது ஒலியைக் குறிக்கும். (இதில் ஓசை, பா வகை இடம் பெறும்)

**குறிப்பு** :
அ) ஒவ்வொரு பாடலிலும் – என்ற குறி இடம் பெற்றால் அது சிந்துப்பா வகை. ஓசையானது செப்பலோசை ஆகும்.
ஆ) ஒரு வரியில் எத்தனை சீர்கள் உள்ளனவோ அதை கணக்கில் கொண்டு என்ன வகையான ஆசிரியப்பா எனக் கணக்கிடலாம்.
இ) ஒரு வரியில் ஆறு சீர்கள் இடம் பெற்றால் அது அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.
ஈ) ஒரு வரியில் ஏழு சீர்கள் இடம் பெற்றால் அது எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.
உ) ஒரு வரியில் எட்டு சீர்கள் இடம் பெற்றால் அது எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.
ஊ) ஆசிரிய விருத்தம் என்று வந்தால் அது அகவலோசை ஆகும்.

**அணி நயம்:**

"அணியற்ற பாட்டும்
மணியற்ற கோயிலும் ஒன்றே"

என்பதற்கு இணங்க இப்பாடலில் அணி நயம் சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்:**

**உவமை அணி** : பாடலில் போல, புரைய, அன்ன, போன்ற சொற்கள் இருந்தால் உவமை அணி.

**சொற்பொருள் பின்வருநிலையணி:** ஒரே சொல் திரும்பத் திரும்ப வந்து ஒரே பொருளைத் தந்தால் சொற்பொருள் பின்வருநிலையணி

**உயர்வு நவிற்சி அணி** : தமிழ்நாடு, இந்தியா எனப் பெருமைமிகு சொற்கள் வந்தால் உயர்வுநவிற்சி அணி.

**இயல்பு நவிற்சி அணி** : இயல்பாக செடி, கொடி, இயற்கை என வந்தால் இயல்பு நவிற்சி அணி

**பயிற்சி : 1**

நீலத் திரைகடல் ஓரத்திலே — நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை வட
மாலவன் குன்றம் இவற்றிடையே — புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு
கல்வி சிறந்த தமிழ்நாடு — புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு — நல்ல
பலவித மாயின சாத்திரத்தின் - மனம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு

- பாரதியார்

**எதுகை நயம் :**

"இயற்கைக்கு அழகு பொய்கை
பாட்டிற்கு அழகு எதுகை"

என்பதற்கிணங்க இப்பாடலில் எதுகை சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்** : இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.

**எடுத்துக்காட்டு** :
நீலத், மாலவன், கல்வி, பலவித - ல வரிசை; நின்று, குன்றம், மனம் - ன வரிசை
நித்தம், சாத்திரத்தின் - த வரிசை; தவஞ்செய், இவற்றிடையே- வ வரிசை
குமரி எல்லை, தமிழ்நாடு, கம்பன் - ம வரிசை; சிறந்த பிறந்த - ற வரிசை

**மோனை நயம் :**

**"பாட்டுக்கு வீணை**
**கவிதைக்கு மோனை"**

என்பதற்கிணங்க இப்பாடலில் மோனை சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்** : முதலெழுத்து ஒன்றி வரத்தொடுப்பது மோனை எனப்படும்.
**எடுத்துக்காட்டு** : **நி**ன்று - **நி**த்தம், **கு**மரி - **கு**ன்றம், **க**ல்வி - **க**ம்பன்

**இயைபு நயம் :**

**"இயைபற்ற பாட்டு**
**தொய்வுற்றுப் போகும்"**

என்பதற்கிணங்க இப்பாடலில் இயைபு சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்** : பாடலில் இறுதி எழுத்து ஒன்றி வருவது இயைபு.
**எடுத்துக்காட்டு** : தமிழ்நாடு தமிழ்நாடு

**சந்த நயம்:**

**சந்தம் பாட்டிற்குச் சொந்தம்!**

என்பதற்கிணங்க இப்பாடலில் சந்தம் சிறப்புற அமைந்துள்ளது.

**ஓசை** : செப்பலோசை
**பா வகை** : சிந்துப்பா

**அணி நயம்:**

**"அணியற்ற பாட்டும்**
**மணியற்ற கோயிலும் ஒன்றே"**

என்பதற்கிணங்க இப்பாடலில் அணி நயம் சிறப்புற அமைந்துள்ளது.

**அணி** : உயர்வு நவிற்சியணி (அல்லது) சொற்பொருள் பின்வருநிலையணி

**பயிற்சி : 2**

சாதிச்சண்டை யெல்லாம் - ஓய்ந்து
தணிய வேண்டுமப்பா!
நீதிநா டெங்கும் - நிலைத்து
நிற்க வேண்டுமப்பா!
உலக மக்களெல்லாம் - அன்போ
டொருதாய் மக்களைப் போல்
கலகமின்றி வாழும் - காலம்
காண வேண்டுமப்பா!

**- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

**எதுகை நயம்:**

**"இயற்கைக்கு அழகு பொய்கை**
**பாட்டிற்கு அழகு எதுகை"**

என்பதற்கிணங்க இப்பாடலில் எதுகை சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்** : இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.
**எடுத்துக்காட்டு** : மக்களெல்லாம் - மக்களைப், உலக - கலகமின்றி

**மோனை நயம் :**

**"பாட்டுக்கு வீணை**
**கவிதைக்கு மோனை"**

என்பதற்கிணங்க இப்பாடலில் மோனை சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்** : முதலெழுத்து ஒன்றி வரத்தொடுப்பது மோனை எனப்படும்.
**எடுத்துக்காட்டு** : **நி**லைத்து - **நி**ற்க, **கா**லம்-**கா**ண

**இயைபு நயம் :**

**"இயைபற்ற பாட்டு**
**தொய்வுற்றுப் போகும்"**

என்பதற்கிணங்க இப்பாடலில் இயைபு சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்** : பாடலில் இறுதி எழுத்து ஒன்றி வருவது இயைபு.

**எடுத்துக்காட்டு** : வேண்டுமப்பா! வேண்டுமப்பா!

**சந்த நயம்:**

**"சந்தம் பாட்டிற்குச் சொந்தம்"**

என்பதற்கிணங்க இப்பாடலில் சந்தம் சிறப்புற அமைந்துள்ளது.

**ஓசை** : செப்பலோசை
பாவகை : சிந்துப்பா

**அணி நயம்:**

**"அணியற்ற பாட்டும்**
**மணியற்ற கோயிலும் ஒன்றே"**

என்பதற்கிணங்க இப்பாடலில் அணி நயம் சிறப்புற அமைந்துள்ளது.

**அணி** : உவமையணி

**பயிற்சி : 3**

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்.
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமானபுலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்.

**எதுகை நயம் :**

**"இயற்கைக்கு அழகு பொய்கை**
**பாட்டிற்கு அழகு எதுகை"**

என்பதற்கிணங்க இப்பாடலில் எதுகை சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்** : இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.

**எடுத்துக்காட்டு** : பி**ற**நாட்டு, இ**ற**வாத, ம**றை**வாக, தி**ற**மான

**மோனை நயம் :**

**"பாட்டுக்கு வீணை**
**கவிதைக்கு மோனை"**

என்பதற்கிணங்க இப்பாடலில் மோனை சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்** : முதலெழுத்து ஒன்றி வரத்தொடுப்பது மோனை எனப்படும்.

**எடுத்துக்காட்டு** : புகழுடைய, புதுநூல்கள் - **(பு)**

**இயைபு நயம் :**

**"இயைபற்ற பாட்டு**
**தொய்வுற்றுப் போகும்"**

என்பதற்கிணங்க இப்பாடலில் இயைபு சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்** : பாடலில் இறுதி எழுத்து ஒன்றி வருவது இயைபு.

**எடுத்துக்காட்டு** : வேண்டும் வேண்டும்

**சந்த நயம்:**

**"சந்தம் பாட்டிற்குச் சொந்தம்"**

என்பதற்கிணங்க இப்பாடலில் சந்தம் சிறப்புற அமைந்துள்ளது.

**ஓசை** : அகவலோசை
**பாவகை** : அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

**அணிநயம் :**

**"அணியற்ற பாட்டும்**
**மணியற்ற கோயிலும் ஒன்றே"**

என்பதற்கிணங்க இப்பாடலில் அணி நயம் சிறப்புற அமைந்துள்ளது.

**அணி** : சொற்பொருள் பின்வருநிலையணி / இயல்புநவிற்சி அணி

**பயிற்சி : 4**

பாலைவனம் சோலைவன மாக வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்
சாலைகளில் பல தொழிலும் பெருக வேண்டும்
சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்
சீலைஉடை கதருடையாய்த் திகழ வேண்டும்
தேசப்பக்தி செழித்தோங்கி வளர வேண்டும்
வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்
வெற்றியின் மேல் வெற்றி உமக்கெய்த வேண்டும்

**- கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

**எதுகை நயம் :**

**"இயற்கைக்கு அழகு பொய்கை**
**பாட்டிற்கு அழகு எதுகை"**

என்பதற்கிணங்க இப்பாடலில் எதுகை சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்** : இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.
**எடுத்துக்காட்டு** : பா**லை**வனம், சீ**லை** உடை, சா**லை**களிற், வே**லை**யில்லாத

**மோனை நயம் :**

**"பாட்டுக்கு வீணை**
**கவிதைக்கு மோனை"**

என்பதற்கிணங்க இப்பாடலில் மோனை சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்** : முதலெழுத்து ஒன்றி வரத்தொடுப்பது மோனை எனப்படும்.
**எடுத்துக்காட்டு** : **பா**லைவனம், **பா**ட, **சா**லைகளில், **ச**பைகளில், **சீ**லைஉடை,**செ**ழித்தோங்கி

**இயைபு நயம் :**

**"இயைபற்ற பாட்டு**
**தொய்வுற்றுப் போகும்"**

என்பதற்கிணங்க இப்பாடலில் இயைபு சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்** : பாடலில் இறுதி எழுத்து ஒன்றி வருவது இயைபு.
**எடுத்துக்காட்டு** : வேண்டும் வேண்டும்

**சந்த நயம்:**

**"சந்தம் பாட்டிற்குச் சொந்தம்"**

என்பதற்கிணங்க இப்பாடலில் சந்தம் சிறப்புற அமைந்துள்ளது.

**ஓசை** : அகவலோசை
**பாவகை** : எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

**அணிநயம் :**

**"அணியற்ற பாட்டும்**
**மணியற்ற கோயிலும் ஒன்றே"**

என்பதற்கிணங்க இப்பாடலில் அணி நயம் சிறப்புற அமைந்துள்ளது.

**அணி** : உயர்வு நவிற்சி அணி / சொற்பொருள் பின்வருநிலையணி

**பயிற்சி : 5**

கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்ததைப் போல
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப் பாம்பாய் எண்ணி யெண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்.

**- பாவேந்தர் பாரதிதாசன்**

**எதுகை நயம் :**

**"இயற்கைக்கு அழகு பொய்கை**
**பாட்டிற்கு அழகு எதுகை"**

என்பதற்கிணங்க இப்பாடலில் எதுகை சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்** : இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.
**எடுத்துக்காட்டு** : கி**ளை**யினிற் - வி**ள**க்கினைத் (**ள, ளை**), கி**ளை**தோறும் - ஒ**ளி**ப்பாம்பாய் (**ளை, ளி**)

**மோனை நயம் :**

**"பாட்டுக்கு வீணை**
**கவிதைக்கு மோனை"**

என்பதற்கிணங்க இப்பாடலில் மோனை சிறப்புற அமைந்துள்ளது.

**விளக்கம்** : முதலெழுத்து ஒன்றி வரத்தொடுப்பது மோனை எனப்படும்.
**எடுத்துக்காட்டு** : **வி**ளக்கினைத் - **வெ**டுக்கென (வி, வெ), **கி**ளைதோறும் - **கீ**ழுள்ள (கி, கீ)

**சந்த நயம்:**

**"சந்தம் பாட்டிற்குச் சொந்தம்"**

என்பதற்கிணங்க இப்பாடலில் சந்தம் சிறப்புற அமைந்துள்ளது.

**ஓசை** : அகவலோசை
**பாவகை** : எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

**அணிநயம் :**

**"அணியற்ற பாட்டும்**
**மணியற்ற கோயிலும் ஒன்றே"**

என்பதற்கிணங்க இப்பாடலில் அணி சிறப்புற அமைந்துள்ளது.

**அணி** : உவமை அணி

# 46. பழமொழி - வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுதல்

**குறிப்பு: பழமொழி, பழமொழி விளக்கம், வாழ்க்கை நிகழ்வு, நீதி என்ற வடிவில் விடை அமைத்தல் வேண்டும்.**

## 1. முயற்சி திருவினையாக்கும்

**பழமொழி** : முயற்சி திருவினையாக்கும்

**பழமொழி விளக்கம்** : ஒவ்வொருவரும் வாழ்வில் முயற்சி செய்தால் கட்டாயம் வெற்றி பெறலாம்.

**வாழ்க்கை நிகழ்வு :**

நானும் என் தம்பியும் ஒரே பள்ளியில் பயின்று வந்தோம். என்னைவிட ஒரு வகுப்பு மட்டுமே குறைவாக என் தம்பி பயின்று வந்தான். ஆனால் என்னைவிட அழகாகவும் எளிமையாகவும் ஆங்கிலம் பேசவும் எழுதவும் செய்தான். எனது ஆங்கில மொழி பற்றிய பயத்தை எப்படி போக்குவது என நான் மிகவும் வருத்தமுற்றேன். எனது தம்பி ஆங்கில மொழி மிக எளிமையான மொழி. பயத்தைப் போக்கி முயன்றால் நீயும் ஆங்கிலத்தில் பேசவும் எழுதவும் செய்யலாம் என்று எனக்கு நம்பிக்கையூட்டினான்.

என் தந்தையிடம் கூறி ஆங்கில பத்திரிக்கைகள், செய்தித்தாள்கள் மற்றும் அகராதி ஆகியவற்றை வாங்கினோம். தினமும் ஒரு மணிநேரம் ஆங்கிலம் பயில எனக்கு என் தம்பி பயிற்சி அளித்தான். இப்பொழுது நான் பயமின்றி ஆங்கிலத்தில் பேசவும் எழுதவும் செய்கிறேன். முயற்சியும் பயிற்சியும் இருந்தால் உலகில் கடினமான செயல் என எதுவும் இல்லை “முயற்சி திருவினையாக்கும்” என்பதை நான் என் தம்பியின் வாயிலாக அறிந்து கொண்டேன்.

**நீதி : முயற்சி செய்தால் முடியாதது எதுவுமில்லை.**

## 2. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

**பழமொழி** : கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

**பழமொழி விளக்கம்** : அனைவரும் ஒற்றுமையோடு வாழ்ந்தால் பலகோடி நன்மைகளைப் பெறலாம்.

**வாழ்க்கை நிகழ்வு :**

எங்கள் ஊரில் ஒரு வயதான தந்தைக்கு நான்கு மகன்கள் இருந்தார்கள். அவர்கள் எப்போதும் சண்டையிட்டுக் கொண்டே இருப்பார்கள். அதனால் மனம் வருந்திய தந்தை அவர்களை எப்படியாவது திருத்த வேண்டும் என்று எண்ணினார்.

ஒருநாள் நான்கு மகன்களையும் அழைத்து, தன் அருகில் அமரச்செய்தார். அனைவரும் தந்தையினிடத்தில் அமர்ந்தார்கள். பிறகு, அவர் நான்கு மகன்களிடத்திலும் ஒற்றுமையாக இருக்கும் படி அறிவுரை கூறினார். பிள்ளைகளோ, ஒருவர் மீது ஒருவர் குறை கூறிக்கொண்டனர். தந்தை மிகவும் வருத்தப்பட்டு, இவர்களை எப்படியாவது திருத்த வேண்டும் என யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்.

மறுநாள், தன் பிள்ளைகளை அழைத்து நான்கு மகன்களின் கைகளிலும் ஒரு குச்சியினைக் கொடுத்து அதனை உடைக்கும் படியாகக் கட்டளையிட்டார். நான்கு பிள்ளைகளும் சுலபமாக உடைத்தெறிந்தனர். மறுபடியும் இரண்டுக் குச்சிகளைக் கொடுத்து உடைக்கும் படியாகக் கட்டளையிட்டதும் சுலபமாக உடைத்தனர்.

இதேபோன்று மூன்று குச்சிகள், நான்கு, ஆறு, பன்னிரண்டு, இருபத்து நான்கு என கூடுதலாக்கிக் கொண்டே செல்லச் சிரமத்திற்குள்ளாயினர். கடைசியாக ஒரு கட்டாக அவர்களின் முன்பு வைத்து அதனையும் உடைக்கும்படியாகக் கூறினார். நான்கு மகன்களும் உடைக்க முயன்று முடியாமல் தங்களின் கைகளைக் காயப்படுத்திக் கொண்டனர். தங்களால் உடைக்க முடியவில்லை என ஒப்புக்கொண்டனர்.

தந்தை சிரித்துக்கொண்டே,“நீங்களும் இதேபோல் தனித்தனியாக இருக்கும் போது பகைவர்கள் உங்களைச் சுலபமாக வென்று விடுவார்கள். அவ்வாறில்லாமல் நீங்கள் நால்வரும் ஒற்றுமையாக இருந்தால் யாராலும் அசைக்க முடியாத பலம் உங்களுக்குள் வரும். உங்களை எதிர்ப்பவர்களோ காயப்பட்டுச் செல்வார்கள்” எனக் கூறினார். “ஒருவர் செய்யும் குற்றங்களை மற்றவர்கள் பொறுத்துக்கொள்ளுங்கள். விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை போன்ற குணங்களை வளர்த்துக்கொள்ளுங்கள்” என அறிவுரைகளைக் கூறினார். நான்கு பிள்ளைகளும் தங்களின் தவறுகளை உணர்ந்து, தந்தையினிடத்தில் மன்னிப்பு கேட்டு எப்பொழுதும் ஒற்றுமையாகவே காணப்பட்டனர். தந்தை மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

**நீதி : அனைவரும் ஒற்றுமையோடு வாழ வேண்டும்.**

## 3. சிறு துரும்பும் பல் குத்த உதவும்

**பழமொழி** : சிறு துரும்பும் பல் குத்த உதவும்

**பழமொழி விளக்கம்** : சிறிய துரும்பு கூட தக்க நேரத்தில் உதவ நேரிடலாம்.

**வாழ்க்கை நிகழ்வு:**

சென்ற வருடம் குல தெய்வ வழிபாட்டிற்காக என் குடும்பத்தார் அனைவரும் கோவிலுக்கு சென்றோம். நானும் என் தந்தை இருவரும் இரு சக்கர வாகனத்தில் பயணித்தோம். வழியில் எனக்குத் தாகம் எடுத்தது. என் தந்தையிடம் தண்ணீர் வாங்கித் தருமாறு கேட்டேன். என் தந்தையும் ஒரு நீர்ப்புட்டி வாங்கிக்கொடுத்தார். நீரைக் குடித்துவிட்டு நீர்ப்புட்டியை தூக்கியெறிய முற்பட்டேன். என் தந்தை தடுத்தார். காலி நீர்ப்புட்டியை வை எதற்காவது பயன்படும் என்றார். காலி நீர்ப்புட்டி எதற்கு பயன்பட போகிறது என நான் யோசித்தேன்.

கோயிலில் பூசை முடிந்தது. பூசைக்குப் பயன்படுத்தப்பட்ட அபிஷேகப்பாலை வீட்டிற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று என் அம்மா கூறினார். அப்போது எப்படி எடுத்துச் செல்வது என்று யோசித்து நின்றோம். அப்பொழுது என் தந்தை நீர்ப்புட்டியை என் அம்மாவிடம் கொடுத்தார். அம்மா மனம் மகிழ்ந்து பாலைப் புட்டியில் பிடித்தார். அப்பொழுது, “சிறு துரும்பும் பல்குத்த உதவும்” என்று அறிந்து கொண்டாயா என்று அப்பா என்னிடம் கேட்டார்.

**நீதி: யாரையும் எதையும் அலட்சியப்படுத்த வேண்டாம்.**

## 4. தன் கையே தனக்கு உதவி (அ) தன்னம்பிக்கை

**பழமொழி** : தன் கையே தனக்கு உதவி (அ) தன்னம்பிக்கை

**பழமொழி விளக்கம்** : யாரையும் எதிர்பார்க்காமல் தனக்குத்தானே தானே எந்த வேலையும் செய்தல் வேண்டும்.

**வாழ்க்கை நிகழ்வு:**

நானும் என் நண்பன் குமரனும் பத்தாம் வகுப்பில் படித்து வருகிறோம். விடுமுறையில் அவன் வீட்டில் நான் இருந்த பொழுது, ஒருநாள் அவனுடைய அம்மா பழங்கள் வாங்கி வருமாறு கடைக்குப் போகச் சொன்னார். அவன் கடைக்குச் செல்லும் வழியில், ஓரிடத்தில் அதிகமான மக்கள் கூடியிருந்தார்கள். குமரன் அங்கே என்ன நடக்கிறது என்பதை தெரிந்துகொள்ளும் ஆர்வத்துடன் அருகில் சென்றான். அங்கே தாயத்து விற்கிறவன் கையில் பல வண்ண கயிறுகளால் பிணைக்கப்பட்ட தாயத்துகளை வைத்துக் கொண்டு “வாங்கோ சாமி, வாங்கோ…”என அழைத்தான்.

பழங்கள் வாங்குவதற்காகக் கடைக்கு வந்த குமரன் தன்னை மறந்து அதனைக் கேட்கத் தொடங்கினான். இதை வாங்கி கட்டிக்கிட்டா உங்களுக்கு இருக்கக்கூடிய தேவைகள் எல்லாம் பூர்த்தியாகும் எனக்கூறிய பின்பு, கடைசியாக படிக்கிற பிள்ளைகள் இதனை வாங்கிக்கட்டிக்கொண்டால் அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள்”எனக் கூறினார்.

குமரனுக்கு அந்த வார்த்தை மட்டும் காதில் கேட்டுக் கொண்டே இருந்தது. உடனே குமரன், அம்மா பழம் வாங்கக் கொடுத்த பணத்திற்கெல்லாம் தாயத்து வாங்கினான். அம்மாவிடம் சொன்னால் தன்னை திட்டுவாள் என பயந்து பணம் தொலைந்து விட்டதாகப் பொய் கூறினான்.

குமரனுக்குத் தேர்வு நெருங்கியது. ஆனால் சிறிதும் கவலையின்றி இருந்தான். காரணம், நம்மிடம் தான் தாயத்து இருக்கிறதே என்ன பயம் என்ற கர்வத்தோடு படிக்காமல் இருந்தான். ஆனால் நான், “டேய், இதெல்லாம் நம்பாதே. நீ படித்தால் தான் மதிப்பெண் பெறமுடியும்” என அறிவுரை கூறினேன். “போடா எனக்கு தெரியும் நீ முதல்ல பாஸ் பண்றியான்னு பாக்கலாம்” எனக் குமரன் கூறியதும், “எனக்கு என்மேல் அதிகமான நம்பிக்கை இருக்கிறது. நான் கண்டிப்பாக வெற்றி பெறுவேன்” எனக் கூறினேன்.

அன்று தேர்வுநாள். சிறிதும் பயமின்றித் தேர்வு எழுதினான். தேர்வும் முடிவடைந்தது. தேர்வு முடிவுக்காகக் காத்திருந்தான். தாயத்தின் பலன், குமரன் பத்தாம் வகுப்புத் தேர்வில் தோல்வியைத் தந்தது. குமரனின் தாய் அவனிடம் காரணம் கேட்டாள். அவன் நடந்ததையெல்லாம் கூறினான். கோபமடைந்த தாய் அவனை ஆத்திரம் தீருமளவும் அடித்துவிட்டு தானும் அழுதாள்.

“இனியும் நல்ல வாய்ப்பு உள்ளது. உடனடித் தேர்வுக்கு விண்ணப்பித்துவிட்டு தன்னம்பிக்கையுடன் படி. நிச்சயமாக அதிக மதிப்பெண்களுடன் வெற்றி பெறுவாய்” என்று கூறினேன். குமரனும் உடனடித் தேர்வுக்கு விண்ணப்பித்தான். மறுபடியும் இரவுபகலாக படித்துத் தேர்வு எழுதினான். இப்போது நல்ல மதிப்பெண்களைப் பெற்றான்.

**நீதி: யாரையும் எதிர்பார்க்காமல் தன் வேலையைத் தானே செய்தல் வேண்டும்.**

## 5. மின்னுவதெல்லாம் பொன்னல்ல

**பழமொழி** : மின்னுவதெல்லாம் பொன்னல்ல

**பழமொழி விளக்கம்** : புகழ் பெறுவன எல்லாம் மெய்யானவை அல்ல. போலிகளும் உண்டு.

**வாழ்க்கை நிகழ்வு :**

எங்கள் ஊர் சோலைப்பட்டியில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இராமன் என்பவர் தனியார் சேமிப்பு வங்கி ஒன்றைத் தொடங்கினார். தேசிய வங்கிகள் வழங்குவதைவிட அதிக வட்டிவீதம் தருவோம் என்று ஊரெங்கும் விளம்பரம் செய்தார். எங்கள் ஊர் மக்கள் விவசாயத்தில் உழைத்து சேர்த்த பணத்தை அந்தத் தனியார் வங்கியில் முதலீடு செய்தனர். மேலும் தேசிய வங்கிகளை போல ஒன்று, இரண்டு பேருக்கு கடன் கூட கொடுத்தார் இராமன். இதனால் எம்மூர் மக்கள் நம்பி அதில் ஏராளமான பணத்தை முதலீடு செய்தனர்.

ஒருநாள் இராமன் குடும்பம் ஊரைவிட்டு சென்று விட்டது. பணம் போட்டிருந்த மக்கள் கூட்டம் காவல் நிலையத்திற்கு சென்று முன்பு நின்று, கதறி அழுத போது "மின்னுவதெல்லாம் பொன்னல்ல" என்று நம் முன்னோர் கூறியதையும் அறியாமல் அப்படி ஏமாந்து விட்டீர்களே! நான் தகுந்த நடவடிக்கை எடுக்கிறேன் என்று கூறி காவல்துறை ஆய்வாளர் மக்களை அமைதிப்படுத்தினார்.

**நீதி: எதையும் ஆராயாமல் ஒரு செயலில் ஈடுபட வேண்டாம்.**

## 6. காலத்தே கடமையைச் செய்

**பழமொழி** : காலத்தே கடமையைச் செய்

**பழமொழி விளக்கம்** : குறிப்பிட்ட காலத்தில் தன் கடமையைச் செய்தல் வேண்டும்.

**வாழ்க்கை நிகழ்வு:**

மறுநாள் காலையில் தேர்வு தொடங்குகிறது. தேர்வுக்குரிய பாடங்களைத் திருப்பிக் கொண்டிருந்தான் பார்த்திபன். இரவு பத்து மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போது அவன் எதிர்பாராத விதமாக அவன் தந்தைக்கு நெஞ்சுவலி ஏற்பட்டது. அவர் வலியால் துடித்தார். உடனடியாக 108 அவசர ஊர்தி சேவைக்கு தொலைப்பேசியில் அழைப்பு விடுத்தனர். ஒரு சில நிமிடங்களில் 108 அவசர ஊர்தி வந்துவிட்டது

அப்பாவை வண்டியில் ஏற்றினார்கள். கூடவே அம்மாவும் பார்த்திபனும் சென்றார்கள். அருகிலிருந்த அரசுப் பொது மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள். மருத்துவப் பரிசோதனைக்குப் பின்னர் பயப்படும்படியாக ஒன்றுமில்லை என்று மருத்துவர்கள் கூறினார்கள். ஊசிபோட்டு ஒரு சில மாத்திரைகளைக் கொடுத்தனுப்பினர்.

ஒருமணி நேரத்திற்குள் அப்பா இயல்பு நிலைக்குத் திரும்பியதுடன் வீட்டிற்கும் திரும்பிவிட்டனர். அக்கம் பக்கத்தினரும் தகவல் அறிந்து வந்து நலம் விசாரித்தனர். எனக்கு ஒன்றும் ஆகவில்லை. ஆனால் பார்த்திபன் நாளைத் தேர்வுக்குப் படிக்க இருந்தான். அவனைத்தான் படிக்கவிடாமல் செய்துவிட்டேன் என்றார். ''அதெல்லாம் பயப்படாதீங்க, அவன் நல்லாப் படிக்கிற பிள்ளைதானே'' என்று அம்மா கூறினார்.

பார்த்திபனும் ''ஆமாப்பா, நான் அன்றன்றைய பாடங்களை அன்றன்றே படித்துவிடுவேன். அது உங்களுக்குத் தெரியும்தானே? அப்புறம் ஏனப்பா பயம்? மூன்று திருப்புதல் தேர்வுகள் எழுதி நல்ல மதிப்பெண் எடுத்திருக்கிறேன். நன்றாகப் பயிற்சியும் பெற்றுவிட்டேன். நிச்சயமாக நல்லமதிப்பெண் பெறுவேன். நீங்கள் நன்றாக ஓய்வெடுங்கள். காலையில் தேர்வு எழுத வேண்டியிருப்பதால் நானும் நன்றாகத் தூங்கப்போகிறேன்'' என்று கூறிவிட்டு பார்த்திபன் நிம்மதியாகத் தூங்கினான்.

**நீதி: ஒரு செயலைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்தல் வேண்டும்.**

## 7. பதறிய காரியம் சிதறிப்போகும்

**பழமொழி** : பதறிய காரியம் சிதறிப்போகும

**பழமொழி விளக்கம்** : எந்த ஒரு காரியமும் பதட்டப்பட்டால், அந்தக் காரியம் நடைபெறாது.

**வாழ்க்கை நிகழ்வு:**

இந்த வருடம் எங்கள் ஊர்த்திருவிழாவில் குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. என் தங்கை சில போட்டிகளில் கலந்து கொண்டாள். முதலில் தேக்கரண்டியில் எலுமிச்சை பழம் வைத்து விழாமல் எடுத்துச் செல்லும் போட்டியில் தோற்று விட்டாள். அழுதுகொண்டே வந்தவளை "என்னவாயிற்று?" என வினவினேன். எனக்கு பதற்றமாக இருந்தது என்று கூறினாள்.

அடுத்தப் போட்டியில் பங்கேற்பதற்கு முன் பதற்றத்தை குறைத்துக்கொள். கண்டிப்பாக வெற்றி பெறலாம் என்று கூறினேன். அதே போல அவள் பதற்றத்தை குறைத்துக்கொண்டு வாளியில் நீர் நிரப்பும் போட்டியில் வெற்றி பெற்றாள். மகிழ்ச்சியோடு என்னிடம் வந்து, "பதறிய செயல் சிதறிப்போகும்" என்பதை உணர்ந்து கொண்டேன். பதற்றப்படாமல் இப்போட்டியில் பங்கேற்றதால் இப்போட்டியில் வெற்றி பெற்றேன் என்று நன்றி கூறினாள்.

**நீதி: பதட்டப்படாமல் நிதானமாக எந்த ஒரு செயலையும் செய்தல் வேண்டும்.**

## 46. மரபு / புதுக்கவிதை எழுதுதல்

### 1. இயற்கை

வானம் இயற்கை வனங்கள் இயற்கை
காற்றும் இயற்கை கடல்கள் இயற்கை
மழையும் இயற்கை மலைகள் இயற்கை
ஞாயிறும் இயற்கை திங்களும் இயற்கை
வெயிலும் இயற்கை பனியும் இயற்கை
கார்முகில் இயற்கை கடுங்குளிர் இயற்கை
இணைந்து வாழ்ந்தால் இதந்தரும் இயற்கை
எதிர்த்து நின்றால் பேரிடர்தரும் இயற்கை





### 2. மனித நேயம்

மறைந்ததே மனிதநேயம் மண்ணிலே இன்று!
மறந்ததே இச்சொல்லும் மனதிலே இன்று!
பேரிடர் நிகழ்ந்தால் தான் ஓடிவரும் நிலையிங்கு!
பெரும்பான்மை நேரங்களில் ஒதுங்கியே இருப்பதிங்கு!
அபிமானம் என்பதுமின்று அந்நிய சொல்லானதே!
மனிதனே மனிதனின்று மதிப்பதும் இல்லையே!
உணர்ந்திடுவீர் உலகோரே மாற்றிடுவீர் உள்ளத்தை
உரைத்திடுவீர் உலகிற்கும் மறவாதீர் செயலாற்ற!

### 3. தென்றல்

மரங்களைத் தழுவுகிறாய் வாடையாய்..
மனங்களை வருடுகிறாய் ஜாடையாய்...
அளவோடு வீசினால் நீ தென்றல்!
அதிகமாய் பேசினால் நீ புயல்!
அமைதியாய் உறங்கினால் நீ புழுக்கம்!
கைதி செய்ய முடியா காற்றே!
உன் மங்கை பருவம் தான் தென்றலோ!





### 4. மரம் வளர்ப்போம்

மண்ணுக்கு மழைதரும் மரம்
மண்ணுக்கு வளம்தரும் மரம்
மரம் வளர்த்தால் அமுதமழை
மறந்து போனால் அமிலமழை
கரிவளி குறைத்திடும் மரம்
உயிர்வளி பெருக்கிடும் மரம்
உயிர்களின் சுவாசம் மரம்
உலகுக்கு வரமே மரம்

### 5. நட்பு

அன்பின் சிகரம் நட்பு
இன்ப ஊற்றாம் நட்பு
துன்பம் களைவது நட்பு
துயரினில் ஆறுதல் நட்பு

வளர்ச்சியில் துணைவரும் நட்பு
தளர்ச்சியில் தோள்தரும் நட்பு
உயிருக்கு உயிரானது நட்பு
உனக்காய் உயிர்தரும் நட்பு





### 6. முயற்சி

அணுவைப் பிளந்ததும் முயற்சியாலே
ஆகாயத்தில் பறப்பதும் முயற்சியாலே
சக்கரம் கண்டதும் முயற்சியாலே
சந்திரனுக்குச் சென்றதும் முயற்சியாலே

முயன்றால் முடியாதது எதுவுமுண்டோ
முயலாமல் வெல்வது ஏதுமுண்டோ
முயன்றுபார் வானம்உன் விரல்நுனியில்
சுழலும் வையம்உன் காலடியில்.

### 7. பள்ளி

கல்விக்கண் திறந்திடும் பள்ளி
கலைபலவும் தந்திடும் பள்ளி
பொன்னைப் புடமிடல் போலே
என்னைப் புடமிடும் பள்ளி
பள்ளி நமக்கொரு கோவில்
நல்லாசான் தொழுதிடும் தெய்வம்
கல்விதான் நமக்கு வேதம்
வாழ்ந்திட அதுவே போதும்





### 8. மலை

மலைத்திடச் செய்திடும் மலை
தொலைவிலும் தோன்றிடும் மலை
நிலையில் குலையாத மலை - நம்
உயர்வுக்குச் சான்றாகும் மலை
வான்மேகம் தடுத்திடும் மலை
வான்மழை தந்திடும் மலை
நாட்டுக்கு அரணாகும் மலை - என்
பாட்டுக்குப் பொருளாகும் மலை

### 9. தாயன்பு

அறிவே நீயம்மா! அன்பே நீயம்மா!!
சிறகே தாயம்மா! சிந்தனை நீயம்மா!!
அம்மா உன் மடியம்மா! அது என் உலகம்மா!!
அம்மா உன் தோளம்மா! அது என் நூல் அம்மா!!
உயிராக நானம்மா! ஊனுனது தானம்மா!!
தமிழ்தானே மொழியம்மா! தாய்தானே வழியம்மா!!





### 10. விண்மீன்

வருட வருடமாய் வானில் வலம் வரும்
வசதியில்லா வழக்குகள்!
நிலவின் நீதிமன்றத்தில் நிலுவையில் நிற்க...!!
வளையம் ஒன்றில் வசியம் செய்யப்பட்டு
மின்மினி போல ஓர் ஒளி
கூண்டில் நின்றது பல நொடி.......!!

### 11. வானவில்

வளைந்து நிற்கும் வானவில்லுக்கு
வாழ்க்கை சில நொடித்துளிகள்!
வண்ணம் சில நொடியில் கலைந்தாலும்
வானத்தில் நின்ற பெருமை உண்டு!
வளைந்த எழில் வானவில் நொடி வாழ்வுதான்
வண்ணம் சில நொடியில் கலைந்திட்டாலும்
வான்நில் பெருமை உனக்கு!





### 12. வான்மழை

மண்ணின் மனம் மகிழ்ச்சியில் இளகி இலேசாகும்...
மண்ணின் மணமோ நாசித்துவாரங்களை ஊடுருவும்!
மண் தாங்க வேர் இறங்கும்...
வேர் துளிர்க்க தளிர்கள் எல்லாம் தழைத்து வந்து
தலை துவட்டும்....
காற்றின் சலசலப்பில் இலைக் குடைக்குள்ளிருந்து...
எட்டிப்பார்த்து மறைந்தபடி பூ மொட்டுகள்......
கண்ணாமூச்சி விளையாடும் மழைத்துளிகளோடு........

### 13. விழிப்பு

தோழனே துயில் எழு!
நினைப்பைவிட்டு நிஜத்தில் வாழு!
வெற்றியைத் தொட்டு நிலத்தில் வீழு!
பொறுப்பின் சுமைகளை புஜத்தில் தூக்கு!
புகழின் மமதையை புறத்தில் போடு!





### 14. குழந்தை

பொக்கைச் சிரிப்பினில் பூக்கள் மலரும்
குழறும் மொழியில் குழலும் தோற்கும்
அளைந்த கூழோ அமிழ்தினும் இனிக்கும்!
தளர்ந்த நடையில் தங்கரதம் தோன்றும்
குன்றெனச் செல்வம் கொட்டி வைத்தாலும்
குழந்தைச் செல்வமே உயர்ந்து நிற்கும்
தலைமுறை தழைப்பதும் தத்தம் குழந்தையாலே!

## 47. தமிழாக்கம் தருதல்

### பழமொழிகள் - தமிழாக்கம்

| | | |
|---|---|---|
| 1. | A little stream will drive a light mill. | சிறுதுரும்பும் பல்குத்த உதவும். |
| 2. | An artist lives everywhere. | கலைஞர் எவ்விடத்திலும் பிழைத்துக் கொள்வார். |
| 3. | Think before you leap. | எண்ணிப் பேசு / பேசும் முன் யோசி |
| 4. | Health is wealth | நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் |
| 5. | As is the king so are his subjects. | அரசன் எவ்வழி, குடிமக்கள் அவ்வழி |
| 6. | Pen is mightier than sword. | கத்தி முனையை விட பேனா முனையே வலிமையானது. |
| 7. | Strike while the sun shines. | காற்றுள்ள போதே தூற்றிக்கொள் |
| 8. | Money makes many things. | பணம் பத்தும் செய்யும். |
| 9. | Prevention is better than cure. | வருமுன் காப்பதே சிறந்தது / வெள்ளம் வருமுன் அணைபோட வேண்டும். |
| 10. | Birds of the same feather flock together. | இனம் இனத்தோடு சேரும். |
| 11. | Too much of anything is good for nothing. | அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு. |
| 12. | No pain no gain. | உழைப்பின்றி ஊதியமில்லை. |
| 13. | Haste makes waste. | பதறிய காரியம் சிதறும். |
| 14. | Knowledge is power. | அறிவே ஆற்றல் |
| 15. | Charity begins at home. | தனக்கு மிஞ்சியே தானமும் தர்மமும். |
| 16. | Covet all lose all | பேராசை பெரு நஷ்டம் |
| 17. | Diamonds cut diamonds | முள்ளை முள்ளால் எடு. |
| 18. | East or west, home is the best. | எலி வளையானாலும் தனி வளை வேண்டும். |
| 19. | Empty vessels make the greatest sound. | குறை குடம் கூத்தாடும். |
| 20. | Eagles never catch flies | புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது. |
| 21. | Old is gold | பழமையே பசும்பொன் |
| 22. | Slow and steady wins the race. | நிதானமே பிரதானம் |
| 23. | Many drops make a shower. | சிறு துளி பெரு வெள்ளம். |
| 24. | Union is strength | ஒற்றுமையே பலம் |
| 25. | First deserve, then desire. | முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா? |
| 26. | Little strokes fell great oaks | அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். |
| 27. | Every cock will crow upon his own dunghill. | வீட்டில் எலி வெளியில் புலி. |
| 28. | Art is long but life is short. | கல்வி கரையில, கற்பவர் நாள் சில. |
| 29. | Familiarity breeds contempt | பழகப்பழகப் பாலும் புளிக்கும். |
| 30. | Hearty laugh dispels disease. | வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும். |
| 31. | Take time by the forelock | பருவத்தே பயிர் செய் / காலத்தே கடமையைச் செய். |
| 32. | Even a pin is good for something. | சிறு துரும்பும் பல் குத்த உதவும். |
| 33. | Live and let live | வாழ்; வாழ விடு. |
| 34. | Small rudders guide great ships. | சிறு துரும்பும் பல் குத்த உதவும். |
| 35. | Distance lends enchantment to the view. | இக்கரைக்கு அக்கரை பச்சை. |
| 36. | Misfortunes never come single | பட்டகாலிலே படும், கெட்டக் குடியே கெடும். |

| | | |
|---|---|---|
| 37. | Do well what you have to do | செய்வன திருந்தச் செய். |
| 38. | A friend in need is a friend indeed | ஆபத்தில் உதவுபவனே அருமை நண்பன். |

## வாக்கியங்கள் - தமிழாக்கம்

| | |
|---|---|
| Education should develop and promote good values. | கல்வியானது நன்மதிப்புகளை உருவாக்கி ஊக்குவிப்பதாக இருக்கவேண்டும். |
| Please confirm your exam result by your cell phone. | தேர்வு முடிவுகளை உங்கள் செல்லிடப்பேசி மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளவும். |
| Students want to join computer courses. | மாணவர்கள் கணினி படிப்புகளில் சேர வேண்டும். |
| The Government announced some schemes. | அரசாங்கம் சில திட்டங்களை அறிவித்தது. |
| To good people world appears good. | நல்ல மக்கள் உள்ள உலகம் நல்லதாகவே தோன்றும். |
| Madurai is known as city of temples. | மதுரை கோவில் நகரம் என்று அழைக்கப்படுகிறது. |
| We should not eat often. | நாம் அடிக்கடி சாப்பிட கூடாது. |
| Experience will make a person efficient. | அனுபவமே சிறந்த ஆசான். |
| King Soloman was known for his sharp intelligence. | நுண்ணறிவுக்கு எடுத்துக்காட்டாய் திகழ்பவர் அரசர் சாலமன். |
| Rural life is healthier than urban life. | நகர வாழ்க்கையை காட்டிலும் கிராம வாழ்க்கையே ஆரோக்கியமானது. |
| Gandhiji loved and respected truth more than anything else. | காந்தியடிகள் மற்றெல்லாவற்றையும்விட அதிகமாக உண்மையை நேசித்து மதித்தார். |
| This is the age of computers. | தற்காலம் கணினியுகம் ஆகும். |
| Keep off the grass | புல்லின் மேல் நடக்காதே |
| Behave courteously | மரியாதையுடன் நடந்துகொள் |
| A black hen lays a white egg. | வெளுத்தது எல்லாம் பால் அல்ல. |
| Even a demon will pity a woman. | பெண் என்றால் பேயும் இரங்கும். |
| Take enough water after meals. | உண்ட பின் தண்ணீர் குடி. |
| Library is a place for reading. | நூலகங்கள் புத்தகங்களை வாசிப்பதற்கான இடம் |
| Food is essential for all living beings. | உயிருள்ளவை அனைத்திற்கும் உணவு இன்றியமையாததாகும். |
| The television is one of the wonders of modern India. | தொலைக்காட்சி நவீன இந்தியாவின் அற்புதங்களுள் ஒன்றாகும். |
| Trees are very useful to us. | மரங்கள் நமக்கு மிகவும் பயனுள்ளவை. |
| Letters are a form of conversation | கடிதங்கள் உரையாடல் வடிவினதாகும். |

**தயாரிப்பு**
**திரு. த. செல்வேந்திரன் முதுகலை பட்டதாரி ஆசிரியர்**
**அரசு மேல்நிலைப்பள்ளி, மூவானூர், திருச்சி**

**தயாரிப்பில் உதவி**
**திருமதி. நா. தேவிகா சுரேஷ் MA., B.Ed., P.G.D.C.A.,**
**வெற்றிக்கு வழி ஆசிரியர் குழு**